**வேலூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. க. முனுசாமி, M.A., M.Sc., MBA., B.Ed., M.Phil.,**

**நக. எண்.200/பமேகு/மாஒ6/ஒபக/2022. நாள் : 28.02.2023.**

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் – எடுக்கப்பட்ட தீர்மானம் மீதான நடவடிக்கை – சார்பு.

பார்வை : சென்னை–9, பள்ளிக்கல்வி முதன்மை செயலாளர் அவர்களின் 13.02.2023 நாளிட்ட வேலூர் மாவட்ட ஆட்சியருக்கான கடிதம்.

********

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2022 அன்று "நம் பள்ளி, நம் பெருமை" என்னும் மகத்தான திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் School Development Plan என்னும் மொபைல் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பள்ளியின் வளர்ச்சி மட்டுமின்றி பள்ளிகளின் அத்தியாவசியத் தேவைகளை கண்டறியும் பொருட்டு மேற்குறிப்பிட்ட மொபைல் செயலியானது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் School Development Plan மொபைல் செயலியின் பயன்பாடும் குறிப்பிட்ட அளவில் உயர்ந்து வருகிறது.

நம் வேலூர் மாவட்டத்தில், ஜூலை 2022 முதல் பிப்ரவரி 2023 வரை 7 பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதில் சராசரியாக 82 சதவீத வருகைப்பதிவு

செய்யப்பட்டுள்ளது. 70 சதவீத பள்ளிகளில் மொபைல் செயலியினை பயன்படுத்தி பள்ளி மேம்பாட்டு திட்டத்தினை உள்ளீடு செய்யப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் சென்னை–9, பள்ளிக்கல்வி முதன்மை செயலாளர் அவர்களின் 13.02.2023 நாளிட்ட வேலூர் மாவட்ட ஆட்சியருக்கான கடிதத்தில் மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் முக்கிய உள்கட்டமைப்புத் தேவைகள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அவசர மற்றும் அடிப்படைத் தேவைகளை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது. நம் வேலூர் மாவட்டத்தில் இணைப்பில் கண்டுள்ள 41 பள்ளிகளின் 52 வகையான தீர்மானங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 02.03.2023, மாலை 02.00 மணியளவில் காட்பாடி, மாவட்ட திட்ட அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துக் கொள்ள சார்ந்த தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பள்ளிகளின் பட்டியல்

28/02/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்க்காக

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,

வேலூர் மாவட்டம்.

28/02/2023

பெறுநர் :

சார்ந்த அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.

நகல் :

1. வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கைக்காக.
3. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) தொடர் நடவடிக்கைக்காக.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
5. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ).